OS: 509/2018

Date: 11.04.2022

பெயர் : மனோகரன்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி - 1, 2 பிரதிவாதிகள் தரப்பில்**

வழக்கில் எத்தனை தீர்மானங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எண்ணிக்கை எனக்கு தெரியாது. தீர்மானங்கள் எந்த தேதி, மாதம், வருடம் ஏற்பட்டது என்று தற்போது நியாபகம் இல்லை. வழக்கில் முதல் விசாணை அளித்தபோது தான் தீர்மானங்களை முன்னிலைப்படுத்தியபோதுதான் தாக்கல் செய்தேன் என்றால் தெரியவில்லை. தீர்மானங்களை நான் வழக்கு தாக்கல் செய்தபோது தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு தெரியாது. இந்து அறநிலையத் துறையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு (வா.சா.ஆ.11) எந்த ஆண்டு பிறப்பிக்கப்பட்டது என்றால் 1984ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும் 1986ம் ஆண்டுதான் பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு நியாபகம் இல்லை. வா.சா,.ஆ.11 வழக்கு தாக்கல் செய்தபோது தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. வா.சா.ஆ.11க்கு பறிகு 20.07.1987ல் இந்து சமய அறநிலையத் துறையில் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த உத்தரவு சுப்ரமணி செட்டியார் வகையறா கொடுத்த மனுவின்பேரில் பிறப்பிக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த உத்தரவில் 3 நபர்களுக்கு குறைவில்லாமலும், 5 நபர்களுக்கு மிகையில்லாமலும் தர்மகர்த்தா நியமிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1987ம் ஆண்டு முதல் வழக்கு தாக்கல் செய்யும் காலம் வரை தர்மகர்த்தா நியமிக்கப்பட்டதற்கான தீர்மானம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1987ம் ஆண்டு முதல் எத்தனை முறை தர்மகர்த்தா நியமிக்கப்பட்டார்கள், எத்தனை முறை தீர்மானம் எறப்ட்டது என்று எனக்கு தெரியாது. அது சம்மந்தமான தீர்மானம் நீதிமனறத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்ததா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.11 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் சுழற்சி முறையில் வரும் தர்மகர்த்தா, பரம்பறை தர்மகர்த்தா அல்ல. தர்மகர்த்தா கூட்டம் போட்டு அதனடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றால் சரிதான். எங்கள் சமூகத்தில் செட்டிக்கணக்கர்கள் எத்தனை பேர் உள்ளனர் என்றால் கன்னட செட்டி 5 பேர், தெலுங்கு

தேவாங்க செட்டியார் 5 பேர். செட்டிக்கணக்காளர்கள் தலைமையில் தான் தீர்மானங்கள் கூட்டம் ஏற்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ல் யார் தலைமையில் தீர்மானம் ஏற்பட்டது என சொல்லப்படவில்லை என்றால் சரிதான்,. அவசர கதியில் அன்றைய கணக்கர்களை வைத்து தீர்மானம் ஏற்பட்டது. தீர்மானங்கள் செட்டிக்கணக்காளர்கள் கையொப்பம் செய்தால்தான் செல்லும் என்றால் அவசர நேரத்தில் தர்மகர்த்தாவும் கையொப்பம் செய்யலாம். கோவில் காரியங்கள் செட்டிக்கணக்காளர்களுக்கு முன்னிலையில்தான் நடைபெறும் என்றால் தர்மகர்த்தா செய்வார், செட்டிக்கணக்காளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும். செட்டிக்கணக்காளர்கள் முன்னிலையில்தான் தீர்மானங்கள் ஏற்படும், வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ல் 65 நபர்கள் கையொப்பம் செய்துள்ளனர். வா.சா.ஆ.12 தீர்மானம் சட்டப்படியானது அல்ல என்றால் சரியல்ல. கூட்டத்தில் வந்த நபர்கள் கையொப்பம் செய்துள்ளனர். வா.சா.ஆ.14 10.05.2017 தீர்மானத்தில் 25 நபர்கள்தான் கையொப்பம் செய்துள்ளனர் என்றும், அது சட்டப்படியானது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 தீர்மானத்தில் முன்னால் அறங்காவலர்களால் செட்டிக்கணக்காளர்களால் கையொப்ம் செய்யவில்லை என்றால் சாட்சி முகக்கண்ணாடி கொண்டுவரவில்லை என்றும், தன்னால் பார்த்து கூற முடியவில்லை என்று கூறுகிறார். (சாட்சி தனது வீட்டிற்கு 10 நிமிடத்தில் செல்லலாம் என்று கூறுகிறார். என்னால் கண்ணாடியை கொண்டுவர முடியும் என பதிலளிக்கிறார்.)

**சாட்சியின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒப்பம்/PW1**

**ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்**